நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திருக.சிவகுமார்.

தொ.மு.எண். 4985/2025/எப்1, நாள். 24.10.2025.

பொருள் : மனைப்பிரிவு - நாமக்கல் மாநகராட்சி - பாப்பிநாயக்கன்பட்டி கிராமம் - சர்வே எண். 59/11B2இல் 1.26 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு - இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். CFXR7Y6G / 48279/2025 /TCP / 2025/TCP, நாள். 11.08.2025.
2. மாநகரப் பொறியாளர், நாமக்கல் மாநகராட்சி அவர்களின் குறிப்பு, நாள். 08.10.2025.
3. மாமன்ற தீர்மானம் எண். 566, நாள். 16.10.2025.

******

உத்தரவு :

நாமக்கல் மாநகராட்சிக்குட்பட்ட பாப்பிநாயக்கன்பட்டி கிராமம் சர்வே எண். 59/11B2இல் 1.26 ஏக்கர் பரப்பளவில் உள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரி தங்களால் நேரிடையாக நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதை தொடர்ந்து, பார்வை-1இல் கண்டுள்ள நாமக்கல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் உத்தரவில் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளான சாலை வசதி, தெருவிளக்குகள் வசதி, மழைநீர் வடிகால் வசதி ஆகியவை நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது என பார்வை-2இல் கண்டுள்ள மாநகரப் பொறியாளர் அவர்களின் குறிப்பில் தெரிவித்துள்ளார். மேலும், மூன்றாம் நபரின் தரச்சான்று பெறப்பட்டுள்ளது. பார்வை-1இல் கண்டுள்ள செயல்முறைகளின் நிபந்தனை எண்.5இன்படி, மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.30,000/-, கூர்ந்தாய்வு கட்டணம் ரூ.20,000/- மற்றும் அபிவிருத்திக் கட்டணம் ரூ.20,000/- ஆகியவை மாநகராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் பார்வை-3இல் கண்டுள்ள மாமன்ற தீர்மானத்தில் மாநகராட்சி பராமரிப்பிற்கு சாலைகள், வடிகால் ஆகியவை எடுத்துக் கொள்ளவும், இறுதி ஒப்புதல் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. சாலைகள், பொது ஒதுக்கீடு இடங்கள் மாநகராட்சிக்கு தானமாக தானப்பத்திரம் எண். 3075/2025-இன் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பார்வை-1இல் கண்டுள்ள உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் செயல்முறைகளில் மனைப்பிரிவிற்கு SWP/DTCP/ NAMAKKAL/ LAYOUT NO. 199/2025 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பார்வை-1இல் கண்டுள்ள செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள், பொது நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு, பார்வை 3இல் கண்டுள்ள மாமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

31/10/25

ஆணையாளர்,
நாமக்கல் மாநகராட்சி.

24/10/25

இணைப்பு :

1. மனைப்பிரிவு வரைபடம்.
2. மனைப்பிரிவு நிபந்தனைகள்.

பெறுநர் :

திரு.கே.மனோகரன் மற்றும் இரண்டு நபர்கள்,
51A6, கே.கே.நகர், மோகனூர் ரோடு,
நாமக்கல்.

நகல் : உதவிப் பொறியாளர், நாமக்கல் மாநகராட்சி - பொது உபயோக இடம் மற்றும் சாலைகளை, சாலைப்பதிவேட்டில் பதிவு செய்யவும் மற்றும் பராமரிப்பு செய்யும் பொருட்டு.

நகல் : உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் - அவர்களின் தகவலுக்கு.

நகல் : வருவாய் ஆய்வாளர், நாமக்கல் மாநகராட்சி - காலிமனை வரி விதிவு செய்யும் பொருட்டு.

நகல் : நகர சார் ஆய்வாளர், நாமக்கல் மாநகராட்சி - அவர்கள் ஒப்படைப்பு செய்யப்பட்ட மனைப்பிரிவு சாலை இடத்தினை மாநகராட்சி ஆணையாளர் பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய தேவையான நடவடிக்கை மேற்கொள்ள.

நகல் : நகர திட்டமிடுநர் / இளநிலைப் பொறியாளர் (திட்டம்), நாமக்கல் மாநகராட்சி.